**நவம்பர் – 27**

# TNPSC துளிகள்

- தமிழக முதல்வர் கோவையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவைத் திறந்து வைத்தார்.
- தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (NALSA) நிர்வாகத் தலைவராக நீதிபதி விக்ரம் நாத் நியமிக்கப்பட்டுள்ளார்.
- துயரத்தில் உள்ள பெண்களுக்கு உடனடி உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்காக தேசிய மகளிர் ஆணையம் ஆனது 14490 என்ற புதிய கட்டணமில்லா உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பட்டுப்புழு வளர்ப்பு ஆராய்ச்சி, புதுமை மற்றும் நிலையான பட்டுத் தொழில் மேம்பாட்டில் உலகளாவிய ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக 11வது BACSA சர்வதேச மாநாடு - CULTUSERI 2025 ஆனது ஜார்ஜியாவில் நடைபெற்றது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சவுதி அரேபியாவை நேட்டோ அமைப்பு சாராத ஒரு முக்கிய நட்பு நாடாக நியமித்து, எதிர்காலத்தில் சவுதி அரேபியாவிற்கு F-35 போர் விமானங்களை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
  - இந்த அந்தஸ்தைப் பெறும் 20வது நாடாக சவுதி அரேபியா மாறும்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பிராந்தியப் பாதுகாப்பிற்காக உறுப்பினர் நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக என்று கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் 7வது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (NSA) அளவிலான கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது.
  - இந்தக் கூட்டமானது கடல்சார் பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு, கடத்தல் எதிர்ப்பு, இணையவெளி பாதுகாப்பு மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகிய ஐந்து துறைகளின் கீழான முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்தது.
- புது டெல்லியில் நடைபெற்ற 10வது APDIM அமர்வில், பேரிடர் மற்றும் பருவநிலை அபாயக் குறைப்புக்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளது.
  - சிறந்த இடர் மதிப்பீடு மற்றும் முன் எச்சரிக்கைக்காக ஆசிய-பசிபிக் பகுதியில் உள்ளடக்கிய மற்றும் நம்பகமான பேரிடர்-ஆபத்து தரவு நிர்வாகத்தை வலுப்படுத்துவதை இந்த அமர்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முந்திரிகளில் ஆக்ஸிஜனேற்றிகள், ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் தாமிரம், மெக்னீசியம் மற்றும் மாங்கனீசு போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளதை எடுத்துக் காட்டும் வகையில் நவம்பர் 23 ஆம் தேதியன்று தேசிய முந்திரி தினம் கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## MTC - Bus First பிரச்சாரம்

- சென்னையில் உள்ள பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) ஆனது 'Bus First' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- சாலைகளில் MTC பேருந்துகளுக்கு முன்னுரிமை அளிக்க வாகன ஓட்டிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாகும்.
- இதற்கு ITDP (போக்குவரத்து மற்றும் மேம்பாட்டுக் கொள்கை நிறுவனம்) மற்றும்


சென்னை மாநகரப் போக்குவரத்து காவல்துறை ஆதரவு அளிக்கின்றன.

- ❖ இந்தப் பிரச்சாரம் பொதுப் போக்குவரத்துக்கு மரியாதை அளித்து, தனியார் வாகனங்களிலிருந்து அரசுப் பேருந்துகளின் பயன்பாட்டிற்கு மாறுவதை ஊக்குவிக்கிறது.
- ❖ கிரிக்கெட் வீரர் திருஷ் காமினி இப்பிரச்சாரத்திற்கான விளம்பரத் தூதராக நியமிக்கப் பட்டுள்ளார்.




# தேசியச் செய்திகள்

## IMD வண்ணக் குறியிடப்பட்ட வானிலை எச்சரிக்கைகள்




- ❖ இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) ஆனது, வெவ்வேறு வானிலை சூழ்நிலைகளுக்கு பச்சை, மஞ்சள், ஆரஞ்சு மற்றும் சிவப்பு எச்சரிக்கைகளை வெளியிடுகிறது.
- ❖ மழை, இடியுடன் கூடிய மழை, பனிப்பொழிவு, ஆலங்கட்டி மழை, தூசிப் புயல்கள், வெப்ப அலைகள் மற்றும் குளிர் அலைகளுக்கு இந்த எச்சரிக்கைகள் பயன்படுத்தப் படுகின்றன.
- ❖ பச்சை நிற எச்சரிக்கை என்பது லேசான மழையைக் குறிக்கிறது, எனவே எந்த எச்சரிக்கையும்/ஆலோசனையும் தேவையில்லை; மஞ்சள் எச்சரிக்கை என்பது எச்சரிக்கையாக இருக்க வேண்டியதைக் குறிக்கிறது.
- ❖ ஆரஞ்சு எச்சரிக்கை என்பது கடுமையான வானிலைக்குத் தயாராக இருக்க வேண்டும்

என்பதையும், மேலும் சிவப்பு எச்சரிக்கை என்பது மிகவும் ஆபத்தான வானிலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது.

- பச்சை (<64 மிமீ), மஞ்சள் (64.5–115.5 மிமீ), ஆரஞ்சு (115.6–204.4 மிமீ), மற்றும் சிவப்பு (>204.5 மிமீ) ஆகிய மழைப்பொழிவு எச்சரிக்கைகள் ஆனது, 24 மணி நேர மழைப் பொழிவினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.
- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) என்பது இந்திய அரசின் புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு இந்திய நிறுவனமாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### காசா அமைதித் திட்டம் 2025




- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது (UNSC), அமெரிக்கா தயாரித்த ஒரு தீர்மானத்தின் மூலம் அதிபர் டிரம்பின் காசா அமைதித் திட்டத்தை அங்கீகரித்தது.
- 15 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 13 வாக்குகள் ஆதரவாகவும், எந்தவொரு எதிரான வாக்குமின்றியும், சீனா மற்றும் ரஷ்யா வாக்களிக்காமலும் அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- காசா மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு விரிவான திட்டத்தை இந்தத் தீர்மானம் அங்கீகரித்தது.
- இதில் போர் நிறுத்தம், பணயக் கைதிகள் - கைதிகள் பரிமாற்றம் மற்றும் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளை (IDF) பகுதியளவு திரும்பப் பெறுதல் ஆகியவை அடங்கும்.
- இது இராணுவமயமாக்கல், இடைக்கால நிர்வாகம், புனரமைப்பு மற்றும் காசாவில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை குறிப்பிட்டுக் காட்டியது.
- இந்தத் தீர்மானம் ஆனது 2027 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை காசாவிற்கான தற்காலிக நிர்வாக அமைப்பாக அமைதி வாரியத்தை (BoP) நிறுவியுள்ளது.
- எல்லைகளைப் பாதுகாக்கவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும், ஆயுதக் குழுக்களின்

ஆயுத நீக்கத்தினை ஆதரிக்கவும் சர்வதேச நிலைப்படுத்தல் படையை (ISF) இது அங்கீகரித்தது.

## உக்ரைன் அமைதித் திட்டம் 2025




- ஐரோப்பாவின் E3 (பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி) அமெரிக்காவின் 28 அம்ச உக்ரைன் அமைதித் திட்டத்திற்கு எதிர் முன்மொழிவை வெளியிட்டுள்ளது.
- இது உக்ரைனின் இறையாண்மையை உறுதிப்படுத்தி, ரஷ்யா, உக்ரைன் மற்றும் நேட்டோ (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) இடையே ஓர் ஆக்கிரமிப்பு அல்லாத ஒப்பந்தத்திற்கு அழைப்பு விடுக்கிறது.
- இந்தத் திட்டம் ஆனது உக்ரைனுக்குப் பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கி, அதன் இராணுவத்தை 800,000 ஆகக் கட்டுப்படுத்துகிறது என்பதோடு மேலும் அமைதிக் காலத்தில் நேட்டோ படைப் பிரிவுகள் உக்ரைனில் தங்குவதைத் தடுக்கிறது.
- இது உக்ரைனுக்கான ஒரு முக்கிய மீள் மேம்பாட்டுத் திட்டத்தினை ஆதரிப்பதோடு, படிப்படியான தடை விலக்கு மற்றும் ரஷ்யாவிற்கு G8 அமைப்பின் அங்கத்துவத்தை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை அளிக்கிறது.
- தொடர்புப் பகுதியிலிருந்து தொடங்கும் பிராந்தியப் பேச்சுவார்த்தைகளுடன், அமைதி வாரியத்தின் கீழ் கண்காணிக்கப்படும் ஓர் ஒப்பந்தத்திற்குப் பிறகு போர் நிறுத்தம் தொடங்கும்.

## G20 உச்சி மாநாடு 2025 - கூட்டுப் பிரகடனம்

- அமெரிக்காவின் புறக்கணிப்பு இருந்த போதிலும், ஜோகன்னஸ்பர்க் உச்சிமாநாட்டில் G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள் 122 அம்ச கூட்டுப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டனர்.
- இந்தப் பிரகடனம் ஆனது உச்சி மாநாட்டின் இறுதியில் அல்லாமல், வழக்கத்திற்கு மாறாக அதன் தொடக்கத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது தீவிரவாதத்தை "அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும்" கடுமையாகக் கண்டித்தது.

- ஐ.நா. கொள்கைகளுடன் ஒருங்கிணைந்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை மாற்றுவதற்கு எந்தவொரு நாடும் அதன் பலத்தையோ அல்லது அச்சுறுத்தல்களையோ பயன்படுத்தக்கூடாது என்பதை இந்த ஆவணம் மீண்டும் உறுதிப் படுத்தியது.
- இது ஒற்றுமை, சமத்துவம் மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தியதோடு, பலதரப்பு ஒத்துழைப்பு, பருவநிலை நடவடிக்கை, பேரிடர் மீள்தன்மை மற்றும் கடன் நிலைத் தன்மைக்கு அழைப்பு விடுத்தது.




## G20 அமைப்பில் ஆறு உலகளாவிய முன்னெடுப்புகள்



**India calls for 6 initiatives**

1. **GLOBAL TRADITIONAL KNOWLEDGE REPOSITORY** — Platform to document and share traditional wisdom demonstrating sustainable living models. India's Knowledge Systems initiative will form the base.
2. **AFRICA SKILLS MULTIPLIER INITIATIVE** — Train-the-trainers model supported by G20 partners to create one million certified trainers in Africa over the next decade, who will skill millions of young people.
3. **INITIATIVE ON COUNTERING DRUG-TERROR NEXUS** — Dedicated initiative to unify financial, governance and security tools to disrupt trafficking networks, choke illicit financial flows and weaken terrorist funding. Focus on synthetic drugs like fentanyl.
4. **GLOBAL HEALTHCARE RESPONSE TEAM** — To comprise trained medical experts from G20 countries and be prepared for rapid deployment in the event of any global health crisis or natural disaster.
5. **OPEN SATELLITE DATA PARTNERSHIP** — G20 space agencies' satellite data will be made available to developing countries for agriculture, fisheries, disaster management and other activities.
6. **CRITICAL MINERALS CIRCULARITY INITIATIVE** — Foster recycling, urban mining, second-life battery projects and innovation to strengthen supply chain security and develop cleaner development pathways.



- ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற G20 அமைப்பின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் ஆறு புதிய உலகளாவிய முன்னெடுப்புகளை அறிவித்தார்.
- இந்த முன்னெடுப்புகள் உலகளாவிய மேம்பாடு, சுகாதாரத் தயார்நிலை, தரவுப் பகிர்வு மற்றும் வளப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.
- உலகளாவியப் பாரம்பரிய அறிவுக் களஞ்சியம் ஆனது பாரம்பரிய அறிவுக்கான பகிரப் பட்ட சர்வதேச தளமாகச் செயல்படும்.

- ஆப்பிரிக்கா திறன் பெருக்கத் திட்டம் ஆனது ஆப்பிரிக்காவில் இளையோர்களின் திறன் மேம்பாட்டை ஆதரிக்க ஒரு மில்லியன் சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும்.
- G20 உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கை குழுவில் உலகளாவிய சுகாதார அவசரநிலைகளின் போது நிலை நிறுத்தக் கூடிய அனைத்து G20 நாடுகளின் சுகாதார நிபுணர்கள் இடம் பெறுவர்.
- போதைப்பொருள்-தீவிரவாத தொடர்பினை எதிர்ப்பதற்கான முன்னெடுப்பு போதைப் பொருள் கடத்தல் மற்றும் தீவிரவாதத்திற்கு இடையிலான தொடர்புகளை சீர்குலைக்க ஒருங்கிணைந்த நடவடிக்கையை செயல்படுத்தும்.
- தடையற்ற செயற்கைக்கோள் தரவுக் கூட்டாண்மை G20 நாடுகளின் விண்வெளி நிறுவனங்களின் செயற்கைக் கோள் தரவை வளர்ந்து வரும் நாடுகளுக்குக் கிடைக்கப் பெறச் செய்யும்.
- முக்கியக் கனிமங்கள் சுழற்சி முன்னெடுப்பு ஆனது மறு சுழற்சி, நகர்ப்புறச் சுரங்கம் மற்றும் முக்கிய கனிமங்களின் சுழற்சி முறைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும்.

## உமானியா முன்னெடுப்பு 2025




- இந்திய அரசாங்க இணையச் சந்தை (GeM) மற்றும் UN பெண்கள் அமைப்பு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- GeM வசதியின் உமானியா முன்னெடுப்பின் கீழ், அரசு கொள்முதலில் முறைசாரா துறையைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோரின் பங்களிப்பை மேம்படுத்துவதே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- மத்திய மற்றும் மாநில அரசு அமைச்சகங்கள், துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு நேரடியாகத் தயாரிப்புகளை வழங்க பெண் தொழில்முனைவோர் மற்றும் சுய உதவிக்குழுக்களை (SHGs) GeM அனுமதிக்கிறது.
- ஐ.நா. பெண்கள் அமைப்பானது பயிற்சி, உலகளாவிய சிறந்த நடைமுறைகள், வெற்றிக் கதைகள், சரிபார்ப்பு அளவுருக்கள் மற்றும் பெண் பயிற்சியாளர்களை ஒன்று திரட்டும்.

- இந்த ஒத்துழைப்பு பாலினம் சார்ந்த நடவடிக்கை சார்ந்த கொள்முதலை ஆதரிக்கிறது, என்பதோடு ஒரு குறிப்பிட்டப் பகுதியின் உள்ளூர் சந்தை இணைப்புகளை வலுப் படுத்துகிறது.

## வங்காளதேசம் – ஹசீனாவை நாடு கடத்துவதற்கான கோரிக்கை




- முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்தக் கோரி வங்காளதேசத்தின் இடைக் கால அரசாங்கம் இந்தியாவிற்கு ஒரு முறையான கடிதத்தை அனுப்பியுள்ளது.
- ஹசீனா மற்றும் முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுஸ்மான் கான் கமலுக்கு மரண தண்டனை விதித்த சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று நடைபெற்ற மாபெரும் போராட்டங்களின் போது வங்காளதேசத்திலிருந்து தப்பி ஓடியதிலிருந்து ஷேக் ஹசீனா இந்தியாவில் வசித்து வருகிறார்.
- இந்திய வெளியுறவு அமைச்சகம் ஆனது தீர்ப்பை ஒப்புக் கொண்டாலும், நாடு கடத்தல் கோரிக்கைக்கு இன்னும் பதிலளிக்கவில்லை.
- ஹசீனாவின் பதவிக் காலத்தில் அவர் காணாமல் போனதில் அவரது பங்கு குறித்து ஆராய சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் (ICT) ஒரு புதிய விசாரணையைத் திட்டமிட்டுள்ளது.

## IBSA தலைவர்கள் கூட்டம் 2025

- 2025 ஆம் ஆண்டு IBSA (இந்தியா-பிரேசில்-தென்னாப்பிரிக்கா) தலைவர்கள் கூட்டம் ஆனது G20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது.
- மூன்று நாடுகளும் முக்கிய ஜனநாயகங்கள் மற்றும் உலகின் வளர்ந்து வரும் தெற்கு நாடுகளாக பகிரப்பட்ட மேம்பாட்டு முன்னுரிமைகள் குறித்து விவாதித்தன.

- இங்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை சீர்திருத்தம் அவசியம் என்பதை இந்த நாடுகளின் தலைவர்கள் எடுத்துரைத்து, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியாவிற்கான நிரந்தரப் பிரதிநிதித்துவத்திற்கு அழைப்பு விடுத்தனர்.
- நிர்வாகம், மேம்பாடு மற்றும் பலதரப்பு சீர்திருத்தங்களில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முத்தரப்பு மன்றமாக IBSA அமைப்பின் பங்கை இந்தக் கூட்டம் மீண்டும் உறுதிப்படுத்தியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### பெலெம் தொகுப்பு 2025




- பெலெம் தொகுப்பு என்பது பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்ட 29 பருவநிலை முடிவுகளின் குழுவாகும்.
- இது பாரிசு உடன்படிக்கையின் (2015) கீழ் பேச்சுவார்த்தைகளில் இருந்து நடவடிக்கைக்கு நகர்வதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த தொகுப்பில் வலுவான பருவநிலை நிதி, மாற்றம் மற்றும் சிறந்தத் தகவமைப்பு ஏற்பு திட்டமிடலுக்கான படிநிலைகள் உள்ளன.

- உலக நாடுகள் தங்கள் பருவநிலை வாக்குறுதிகளைப் பின்பற்றுகின்றனவா என்பதைச் சரிபார்க்க உலகளாவியச் செயல்படுத்தல் கண்காணிப்பு போன்ற செயற் கருவிகளை இது அறிமுகப்படுத்தியது.
- இந்தத் தொகுப்பு பாலின உள்ளடக்கம், சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பையும் ஆதரிக்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மேம்பாட்டிற்கான உலக நாடுகளின் உறுதிப்பாடுகள் குறியீடு 2025

| | | FINANCE | EXCHANGE | | | GLOBAL PUBLIC GOODS | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Country | Overall Rank | Finance | Investment | Migration | Trade | Environment | Health | Security | Technology | Income-adjusted rank |
| Sweden | 1 | 2 | 6 | 5 | 9 | 1 | 4 | 6 | 19 | 3 |
| Germany | 2 | 10 | 4 | 1 | 3 | 9 | 7 | 22 | 11 | 1 |
| Norway | 3 | 3 | 1 | 6 | 31 | 17 | 2 | 12 | 13 | 28 |
| Finland | 4 | 11 | 13 | 14 | 7 | 18 | 1 | 1 | 27 | 6 |
| United Kingdom | 5 | 9 | 5 | 22 | 4 | 10 | 12 | 8 | 12 | 5 |
| Austria | 6 | 20 | 15 | 7 | 14 | 12 | 14 | 5 | 5 | 9 |
| France | 7 | 14 | 2 | 23 | 15 | 7 | 10 | 20 | 9 | 4 |
| Canada | 8 | 17 | 3 | 8 | 12 | 34 | 13 | 16 | 4 | 10 |
| Switzerland | 9 | 12 | 12 | 16 | 24 | 13 | 8 | 15 | 7 | 29 |
| Luxembourg | 10 | 1 | 35 | 3 | 17 | 19 | 17 | 21 | 6 | 25 |
| Netherlands | 11 | 6 | 27 | 11 | 1 | 14 | 11 | 7 | 24 | 16 |
| China | 34 | 37 | 30 | 35 | 28 | 20 | 37 | 32 | 18 | 33 |
| Indonesia | 35 | 26 | 31 | 38 | 35 | 31 | 33 | 37 | 22 | 31 |
| India | 36 | 38 | 33 | 36 | 38 | 8 | 26 | 33 | 31 | 30 |
| Mexico | 37 | 35 | 34 | 32 | 34 | 30 | 30 | 29 | 38 | 35 |
| Argentina | 38 | 33 | 36 | 27 | 37 | 32 | 38 | 34 | 21 | 36 |

- 2025 ஆம் ஆண்டு மேம்பாட்டிற்கான உலக நாடுகளின் உறுதிப்பாடுகள் குறியீட்டில் (CDI) இந்தியா ஒட்டு மொத்தமாக 36வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டை வாஷிங்டன் DC மற்றும் இலண்டனில் உள்ள ஓர் இலாப நோக்கற்ற சிந்தனைக் குழுவான உலகளாவிய மேம்பாட்டு மையம் (CGD) வெளியிட்டுள்ளது.
- தனிநபர் உமிழ்வு குறைவாக இருப்பதால், சுற்றுச்சூழலில் இந்தியாவின் சிறந்த செயல் திறன் (8வது) பதிவாகியுள்ளது.
- இந்தியாவின் பலவீனமான பகுதிகள் வர்த்தகம் (38வது) மற்றும் மேம்பாட்டு நிதி (38வது) ஆகும்.
- முதலீடு (31வது), இடம்பெயர்வு (36வது) மற்றும் பாதுகாப்பு (31வது) ஆகியவை குறைந்த தரவரிசைகளில் உள்ள பிற பிரிவுகளில் அடங்கும்.
- இந்தியாவின் வருமானம் சரி செய்யப்பட்ட தரவரிசை 29வது இடத்தில் உள்ளது என்ற நிலையில், இது அதன் பொருளாதார அளவுடன் ஒப்பிடும் போது சிறந்ததொரு செயல்திறனைப் பிரதிபலிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## சங்கை திருவிழா 2025

- சங்கை திருவிழா என்பது மணிப்பூரின் வருடாந்திரக் கலாச்சார விழாவாகும்.
- மணிப்பூரின் மாநில விலங்காக இருக்கும் சங்காய் மானின் பெயர் கொண்டு இதற்கு இந்தப் பெயரிடப்பட்டது என்பதோடு இது மாநிலத்தின் கலாச்சார அடையாளத்தை குறிக்கிறது.
- இந்த விழாவின் முக்கிய ஈர்ப்பு ஆனது இம்மாநிலத்தின் ஆன்மீக மற்றும் கலாச்சார ஊடுருவலை வலியுறுத்துவதற்காக நிகழ்த்தப்படுகின்ற மணிப்பூரின் பாரம்பரிய

நடன வடிவமான ராஸ் லீலா (இராசலீலை) ஆகும்.

- லோக்டாக் ஏரியின் மிதக்கும் ஃபும்டிஸில் அமைந்துள்ள கெய்புல் லாம்ஜாவோ தேசியப் பூங்காவில் மட்டுமே காணப்படும் இந்த அருகி வரும் சங்காய் மான்களின் வளங்காப்புத் தேவைகள் குறித்து கவனத்தை ஈர்ப்பதையும் இந்த விழா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது IUCN அமைப்பினால் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது என்பதோடு மேலும் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.




## மதுரா ஜரி போஷக் மற்றும் மீரட் பகில்



- உத்தரப் பிரதேச மாநிலத்தில் மதுரா ஜரி (சரிகை) போஷக் மற்றும் மீரட் பகில் ஆகிய இரண்டு தயாரிப்புகள் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- இதன் மூலம் இந்த மாநிலத்தில் புவிசார் குறியீடு பெற்ற மொத்தப் பொருட்களின் எண்ணிக்கை, இந்தியாவில் மிக உயர்ந்ததாக 79 ஆக உயர்ந்துள்ளன.
- மதுரா ஜரி போஷக் என்பது கிருஷ்ணருடன் தொடர்புடைய ஒரு பாரம்பரியச் சரிகை

வேலைப்பாடுகள் கொண்ட உடையாகும்.

- மீரட் பகில் என்பது 1857 ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின் போது பயன்படுத்தப் பட்ட ஓர் இசைக்கருவியாகும்.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள காசி பகுதியில் முதன்மையாக கைவினைப் பொருட்களில் 32 புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள் உள்ளன.

# முக்கிய தினங்கள்

## குரு தேக் பகதூர் தியாக தினம் 2025 - நவம்பர் 24


- 1621 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அமிர்தசரஸில் பிறந்த குரு தேக் பகதூர் ஒன்பதாவது சீக்கிய குரு ஆவார்.
- 1675 ஆம் ஆண்டு காஷ்மீர் பண்டிதர்களின் சமய உரிமைகளைப் பாதுகாத்ததற்காக முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் உத்தரவின் பேரில் டெல்லியில் அவர் தூக்கிலிடப் பட்டார்.
- 2025 ஆம் ஆண்டு அவரது 350வது தியாக தினமாகும்.
- சமயச் சுதந்திரத்தைப் பாதுகாத்ததற்காக அவருக்கு "ஹிந்த் டி சடார்-இந்தியாவின் கேடயம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- குரு கிரந்த் சாஹிப்பில் உள்ள 115 பாடல்களை அவர் இயற்றினார்.
- அவரது மகன் குரு கோபிந்த் சிங் அவருக்குப் பிறகு பத்தாவது சீக்கிய குருவாகப் பொறுப்பேற்றார்.





## லச்சித் திவாஸ் 2025 - நவம்பர் 24

- இலச்சித் போர்புகனின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.

- இது முக்கியமாக அசாமில் அவரது வீரத்தையும் தலைமையையும் கௌரவிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- அஹோம் பேரரசின் தளபதியாக இருந்த இலச்சித் போர்புகன் சராய்காட் போரில் (1671) இராணுவத்தை வழிநடத்தினார்.
- இந்தப் போரில், பிரம்மபுத்திரா நதிக்கரையில் ராம் சிங் தலைமையிலான முகலாயப் படையை அஹோம் படைகள் தோற்கடித்தன.
- தேசியப் பாதுகாப்புப் பயிற்சி நிறுவனம் (NDA) 1999 ஆம் ஆண்டு முதல் சிறந்த தேர்ச்சி பெற்ற படைப்பிரிவிற்கு இலச்சித் போர்புகன் தங்கப் பதக்கம் வழங்கி வருகிறது.




**பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புக்கான சர்வதேச தினம் 2025 - நவம்பர் 25**




- இந்த நாள் நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 ஆம் தேதி வரை பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான உலகளாவிய 16 நாட்கள் அளவிலான செயல்பாட்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- டொமினிகன் குடியரசின் சர்வதிகாரி ரஃபேல் ட்ருஜிலோவின் கீழான அநீதிக்கு

எதிரான போராட்டத்திற்காக மிராபல் சகோதரிகள் 1960 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் தேதியன்று மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

- அவர்களின் புகழ் உலகளாவிய நடவடிக்கைக்கு உத்வேகம் அளித்தது என்பதோடு 1993 ஆம் ஆண்டில் பாலின அடிப்படையிலான வன்முறையை வரையறுக்கவும் 1999 ஆம் ஆண்டில் இந்த நாளை நிறுவவும் ஐ.நா.வை வழி நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்திற்கான உலகளாவிய கருத்துரு, "UNiTE to End Digital Violence against All Women and Girls" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★